IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

OS NO.111/2014

Deposition DW4 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 21.01.2026 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | Srinivasan | Father's Name : | Balasubramaniam |
| Village : | | Taluk : | |
| பி.வா.சா.: | 4 | Age : | 42 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | | |

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாகொண்டப்பள்ளி கிராம ஊராட்சி செயலாளராக பணிப்புரிந்து வருகிறேன். நான் இன்று தான் நாகொணட்ப்பள்ளி கிராம ஊராட்சி செயலாளராக பணி மாறுதல் செய்யப்பட்டு பொறுப்பேற்று கொண்டேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக நாகொண்டப்ள்ளி கிராம ஊராட்சி செலாளருக்கு வழங்கப்பட்ட சாட்சி சம்மனை எனக்கு முன் பணிப்புரிந்த மஞ்சுநாத் என்பவர் பெற்றுள்ளார். அதன் அடிப்படையில் இன்று நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற சாட்சிய சம்மனில் நாகொணடப்பள்ளி கிராம நத்தம் சர்வே எண் 54க்கான வீட்டு வரி

பதிவேடு எடுத்து வர குறிப்பிட பட்டு இருந்ததது. அதற்கான பதிவேட்டை நான் எடுத்து வந்துள்ளேன். அதன் உண்மை நகலை நான் தாக்கல் செய்கிறேன். **அது சாட்சி சான்றவாணம் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சா.சா.ஆ.2யின் படி நத்தம் சர்வே எண் 54ல் கெம்பண்ணா த/பெ.திம்மராயப்பா என்பவர் பெயரில் வரி விதிப்பு உள்ளதா என்றால் உள்ளது. கெம்பண்ணா த/பெ. திம்மராயப்பா உள்ள வீட்டிற்கான வரிவிதிப்பு எண் 224 அதன் கதவு எண். 1/127. மேற்சொன்ன வரி விதிப்பு எண்ணிற்கு கெம்பண்ணா த/பெ. திம்மராயப்பா வரி செலுத்தி உள்ளார். எவ்வளவு ஆண்டுகளாக மேற்சொன்ன கெம்பண்ணா வரி செலுத்தி வந்துள்ளார் என்றால் நான் இன்று தான் ஊராட்சி செயலாளராக பொறுப்பேற்று உள்ளதால் அந்த விவரங்கள் எனக்கு தெரியவில்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் நீதிமன்றத்தில் இருந்து வழங்கப்பட்ட சாட்சி சம்மனை எனக்கு முன் ஊராட்சி செயலாளராக பணிப்புரிந்து வந்த மஞ்சுநாத் வாங்கி உள்ளார் என்றால் சரிதான். அந்த சாட்சி சம்மனை மஞ்சுநாதிடம் இருந்து நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சாட்சி சம்மனில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணத்தை 1ம் பிரதிவாதி கெம்பண்ணா சொல்லி தான் நான் எடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. எங்கள் கிராம நிர்வாக அதிகாரிதான் இந்த வழக்கில் நான் இங்கு சாட்சியம் அளிக்க வேண்டும் என்றும் அதற்காக ஏற்கனவே சாட்சி சம்மன் வழங்கப்பட்டது என்று தெரிவித்தார் அதனால் இன்று ஆவணங்களை எடுத்து வந்து சாட்சியம் அளிக்கிறேன். ஊராட்சி செயலாளருக்கு வழங்கப்பட்ட சாட்சி சம்மன் நகலை எங்கள் கிராம நிர்வாக

அதிகாரி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி கெம்பண்ணாவிற்கு எங்கள் கிராமத்தில் எத்தனை வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கத்தில் உள்ள தெருவிற்கு வடக்கில் 1ம் பிரதிவாதிக்கு வீடு உள்ளது என்றாலும் அந்த வீட்டில் தான் 1ம் பிரதிவாதி தற்போது குடியிருந்து வருகிறார் என்றாலும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் லட்சுமய்யாவின் வீட்டை 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கி உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் மேலே சொன்ன வரி விதிப்பு எண் எந்த சர்வே எண்ணில் உள்ள வீட்டிற்கான வரிவிதிப்பு எண் என சா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண் 54 மொத்த விஸ்தீரணம் 2.12.5 ஹெக்டர்ஸ் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நாகொண்டப்பள்ளி கிராம மக்களின் அனைவரின் வீடும் சர்வே எண் 54 ல் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் வீடு மட்டுமே உள்ளதாக அதைபொறுத்து மட்டும் நான் சாட்சியம் அளிப்பது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலான ஆவணங்கள் எனக்கு முன்பு இருந்த ஊராட்சி செயலாளரால் வழங்கப்பட்ட வரி ரசீது என்றால் சரிதான். இந்த ஆவணங்கள் குள்ளப்பா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வரிரசீது 1992–93 ஆண்டிற்கான வரி ரசீது என்றால் சரிதான். எங்கள் கிராமத்தில் குள்ளப்பாவிற்கு பாகத்திற்கு வந்த ஒரே ஒரு வீடு மட்டும் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு தான் வா.சா.ஆ,3 முதல் 5 வரையிலான வரி செலுத்தினார் என்றால் அது எனக்கு தெரியாது. சா.சா.ஆ,2 வரி விதிப்பு பதிவேடு 2021–22 ஆண்டிற்கான பதிவேடு. சா.சா.ஆ.2

பதிவேட்டின் முந்தைய காலத்திற்கும் பிந்தைய காலத்திற்கும் பதிவேடு உள்ளது என்றால் சரிதான். அந்த பதிவேடுகளை நான் இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன வரி விதிப்பு எண் வழக்கு சொத்திற்கான வரிவிதிப்புஎண் இல்லை என்றாலும் 1ம் பிரதிவாதிக்கு எங்கள் கிராமத்தில் வேறு வீடு உள்ளது என்றாலும் அந்த வீட்டிற்கான வரிவிதிப்பு எண் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**